கானல்காடு-பெரியூர் சாலை அமைப்பு.

*180—வினா : **திரு. கரு. சீமைச்சாமி :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :—

மதுரை ஜில்லா, கோடைக்கானல் தாலூகா, கானல் காட்டில் இருந்து பெரியூருக்கு புதிய சாலை அமைக்கும் திட்டம் ஏதேனும் சர்க்காரிடம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இல்லை. ஆனால், பெரும்பாறையையும், கிழக்கு செட்டிப்பட்டியையும் இணைக்கிற செயற்குறிப்பு ஒன்று உள்ளது. இச்செயற்குறிப்பு நிறைவேற்றப்பட்டால், பெரும்பாறை, கிழக்கு செட்டிப்பட்டி வழியாக கானல் காட்டிற்கும் பெரியூருக்கும் இடையில் சாலை இணைப்பு ஏற்படும்.

திரு. ராஜ குமார் விஜய ரகுநாத தொண்டமான் : தலைவர் அவர்களே, பழனியில் இருந்து கொடைக்கானலுக்கு ஒரு பாதை போடுவதாக ஒரு ப்ரபோசல் இருந்தது. அதைப் போட்டால்—பழனிக்குப் போக 86 மைல் இப்போதுள்ளபடி போவதற்குப் பதிலாக, 20, 22 மைலுக்குள் போகலாம் என்ற நிலை இருக்கிறது. அந்த ப்ரபோசல் என்ன ஆயிற்று ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : அது அரசாங்கத்தின் ஆலோசனையில் இருக்கிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இந்தக் கேள்வியில் கானல்காடு என்று இருக்கிறதே, இந்தக் கானல் காட்டில் என்ன விசேஷம் இருக்கிறது ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது கானல் உலகத்தில் உறுப்பினர் சஞ்சரிக்கிறார் என்பதைத்தான் காட்டுகிறது.

சுக்காம்பட்டிக்குச் சாலை வசதிகள்.

*181 வினா.—**திரு. பெ. சௌந்திரபாண்டியன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், சுக்காம்பட்டியிலுள்ள பொது மக்கள் சாலை வசதி வேண்டி கோரிக்கை விடுத்துள்ளனரா ?

(இ) ஆம் எனில், அதன்பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்திரபாண்டியன் : தலைவர் அவர்களே, நாம் சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து அந்தக் கிராம மக்கள் சாலை வேண்டுமென்று மனுப்போட்டு வருகிறார்கள். ஆனால், கழக அரசு ஏற்பட்ட பிறகுதான் அந்த ஊருக்கு சாலையே போட்டு முடித்தாகிவிட்டது என்பதாவது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : கனம் அங்கத்தினர் கேள்வி போடுகிறபோது சாலை போடப்படாமல் இருந்திருக்கலாம். சாலை போடப்பட்டுவிட்டதாகத்தான் இப்போது தகவல் இருக்கிறது.

வட்டார வளர்ச்சி இணை அதிகாரிகள்.

*182—வினா **திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இம்மாநிலத்தில் Additional B.D.O.-க்கள் உள்ள ஊராட்சி ஒன்றியங்கள் எத்தனை ?

(இ) எந்த அடிப்படையில் Additional B.D.O.-க்கள் நியமிக்கப்படுகின்றனர் ?